நாள்.16.02.2026
அசல் வழக்கு எண். 125/2024
வா. சா.1
பெயர். பொன்தாம்சன்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

என் மனைவியால் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மனைவி படித்தவள் என்றால் சரிதான். வழக்கு பிரச்சனை என் மனைவி சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். எனது மனைவி 2 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கோருகிறார் என்றால் சரிதான். எனது மனைவி வெளியூரில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான், மதுரையில் பணியாற்றி வருகிறார். வழக்கின் பத்திரங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க தகுதி வாய்ந்தவர் என்னுடைய மனைவி என்றால் சரிதான்.

எனது மனைவி நீதிமன்றம் வந்து சாட்சியம் அளிக்க தடை எதுவும் கிடையாது என்றால் சரிதான். வழக்கில் சொல்லியுள்ள ஆசியா அம்மாள் என்பவரை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து வீடு கொண்ட பகுதி என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆசியா அம்மாள் என்பவரால் 1945 ல் கிரையம் பெற்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆசியா அம்மாள் கிரையம் பெறும் பொழுது கிரைய சொத்தில் கதவு எண் 47 கொண்ட வீடு இருந்தது என்றால் சரிதான், தற்போது இடிந்துவிட்டது. மேற்படி வீடு அழிமான நிலையில் உள்ளது என்றால் சரியல்ல, நான் கிரையம் பெறும் பொழுதே வீடு கிடையாது.

ஆசியா அம்மாள் என்பவருக்கு இரண்டு ஆண்மக்களும், ஒரு பெண் என்றால் சரிதான். அதில் மூத்தவர் செய்யது முகமது என்றால் சரிதான். செய்யது முகமதுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். அதில் முதல் மனைவியின் பெயர் அகமது மீராம்மாள் என்றால் சரிதான். மேற்படி அகமது மீராம்மாள் என்பவருக்கு இரண்டு ஆண்மக்கள் என்று நாங்கள் கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு மகன்களில் ஒருவரான யூசிப் கான் என்பவரை வழக்கில் 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்ந்துள்ளேன் என்றால் சரிதான். அகமது மீராம்மாள் என்பவரின் இரண்டாவது மகன் யூசிப்கான் என்பவருக்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மேற்படி நபர் அகமது மீராம்மாளின் இரண்டாவது மகன் என எதன் அடிப்படையில் சொல்கிறேன் என எந்த விளக்கமும் வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் அகமது மீராம்மாளின் இரண்டாவது மகன் யூசிப்கான்

கிடையாது என தெரிவிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரம் குறித்து விசாரணை எதுவும் செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி நடவடிக்கையின் படி யூசிப்கான் இரண்டாவது மகன் என காட்டும் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டாவது மனைவியின் பெயர் அகமது பாத் என்றால் சரிதான். அகமது பாத்தின் மகன் தான் இவ்வழக்கு 3 ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

மேற்படி அகமது பாத்தும் அவரது மகன் ஜமால் முகைதீன் என்பவரும் என் மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 76/2007 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஜமால் முகைதீன் என்பவர் 31.03.2010 தேதியிட்ட நன்கொடை பத்திரத்தின் படி சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என கட்சி செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் என்னுடைய உரிமையின் மூலம் மறுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

முந்தைய வழக்கிலும் தற்போது உள்ள வழக்கறிஞர் மூலம் தான் ஆஜரானேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோரிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது மனைவி வாங்கிய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சொத்தின் சுவாதீனம் எங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் படித்தவர் என்றால் சரிதான். கிரையம் பெற்ற காலத்திலேயே கிரைய ஆவணங்களை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். கிரைய ஆவணத்தில் பிரிவின்றிய பாகம் கிரையம் பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி பிரிவின்றிய பாகம் என்பதால் சொத்தில் அமைந்துள்ள இடம் நிர்ணயம் செய்ய இயலாது என்றால் சரிதான். முந்தைய வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரங்கள் எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் ஓரளவு ஞாபகம் உள்ளது. முந்தைய வழக்கு எதிர்வழக்குரையில் தற்போதைய வழக்கு சொத்துக்கள் 1,2 தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். முந்தைய வழக்கில் 1,2 தபசில் சொத்துக்களில் என்னுடைய உரிமை மூலம் மறுக்கப்படுவதாகவும் வாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டிருந்தேன் என்றால் சரிதான்.

மேற்படி 1,2 பரிகாரங்களோடு எனது பாகத்தை பிரித்து தரவேண்டும் என பரிகாரம் கேட்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி எதிர்கோரிக்கையை வலியுறுத்தவில்லை என திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். 2017 ம் ஆண்டில் எனது மனைவி பெயரில் கிரையம்

பெற்ற ஆவணங்கள்குறித்து கேள்வி கேட்கும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். உரிமை மறுக்கப்பட்டு 7 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய உரிமை மறுக்கப்பட்டு 3 வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றாலும் அவ்வாறு தாக்கல் செய்யாத இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றாலும் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.

இவ்வழக்கு 3 ம் பிரதிவாதியால் முந்தைய வழக்கிற்கு மேல்முறையீட்டு வழக்கு எண் 214/2020 என்ற வழக்கு மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் நாங்குநேரியில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆசியம்மாளின் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாமல் 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் ஒரு பகுதியை நான் 16.07.2007 அன்று பீர் முகமது என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அது போல் ஒரு பகுதியை ஜமால் முகைதீன் வாரிசு என்ற நிலையில் சாகுல் ஹமீது என்பவரிடமிருந்து 16.074.2007 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

செய்யது முகமது என்பவரின் முதல் மனைவி அகமது மீராம்மாள் இஸ்ஸாமிய முறைப்படி மணவிலக்கு பெற்று தனியாக சென்று விட்டார் என்றால் எனக்கு தெரியாது. செய்யது முகமது முதல் மனைவியை மணவிலக்கு செய்த பிறகு தான் 3 பிரதிவாதியின் தாயாரை 2 வது மனைவியாக திருமணம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரி அவர்களது பங்கை அவரது தாயாரான அகமது பாத் என்பவருக்கு வாய்மொழியாக விட்டு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

நான் உரிமை இல்லாத நபர்களிடமிருந்து தபசில் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளதால் அது 3 பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. முந்தைய வழக்கில் நீதிமன்ற அனுமதியுடன் என்னுடைய எதிர்கோரிக்கை வலியுறுத்தவில்லை என தெரிவித்தவுடன் புதிய வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். முந்தைய வழக்கில் என்னென்ன குறைபாடுகள் இருந்தது என்றும் அதனை நிவர்த்தி செய்யும் விதமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்பு விவரம் இந்த வழக்கு வழக்குரையில் இல்லை என்றால் சரியல்ல.

என்னுடைய பாக சொத்தின் மதிப்பு ரூ.87,490/– என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு ஆரம்பத்தில் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் செய்த வழக்கு சொத்தின் மதிப்பீடு காரணமாக மேற்படி நீதிமன்றத்திற்கு பணவரை ஆள்வரை இல்லாததால் இந்நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் தெரியாது. வழக்கு சொத்து நத்தம் வகைப்பாட்டினை சார்ந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழககுரையில் இவ்வழக்கு சங்கதிகள் இவ்வழக்கிற்கு பொறுத்தாது என குறிப்பிட்டு இருந்தது தெரியுமா என்றால் தெரியாது.

என் மனைவி பெற்ற கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தபசில் சொத்தில் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் உள்ளதால் மற்ற கூட்டு அனுபவத்தில் உள்ள நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. முந்தைய வழக்கில் 3ம் பிரதிவாதி மற்றும் அவரது தாயாரின்அனுபவத்தில் வழகவு சொத்து உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கில் அதற்கு மாறாக சாட்சியம் அளிக்க சட்ட அனுமதி கிடையாது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்ற முத்திரை கட்டண சட்டம் பிரிவு 37(1) ன் கீழ் மட்டுமே பரிகாரம் கோர இயலும் என்றாலும் நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.